# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 15.06.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆவின் உண்மைத் தன்மையை எடுத்துரைத்தவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ஒரு மனிதன் உலக வாழ்க்கைக்காக எவ்வாறு முயற்சிகளை மேற்கொள்வானோ அதைப் போன்று இறைவழியிலும் முயற்சி செய்ய வேண்டும்.

பஞ்சாபியில் ஒரு பழமொழி உள்ளது: ஜோ மங்கே ஸோ மர்ரஹே மரே ஸோ மங்கஞ்சா.

மக்கள் துஆ செய்யும்படி கூறுகின்றார்கள். துஆ செய்வது மரணிப்பதாகும். அதாவது எவரிடம் அதிகபட்ச நிம்மதியின்மை இருக்குமோ அவர் துஆ செய்வார். துஆவில் ஒரு மரணம் உள்ளது. அதன் மிகப்பெரிய விளைவாக மனிதன் ஒரு வகையில் மரணித்து விடுகிறான்.

உதாரணமாக, தாகமுள்ள ஒரு மனிதன், ஒரு துளி தண்ணீரை அருந்தி விட்டு எனது தாகம் தீர்ந்து விட்டது என வாதம் செய்தால் அவர் பொய்யர் ஆவார். ஒரு குவளை நிறைய அருந்தினார் என்றால், அது இந்த விசயத்தின் சாட்சியம் ஆகும். முழுமையான வேதனையுடனும், நிம்மதியற்ற நிலையிலும் துஆ செய்யும் போது, அதாவது ரூஹ் உருகி இறை சன்னதியில் விழுகிறது. இதன் பெயர் தான் துஆ ஆகும். மேலும் இறைவனது நடைமுறை என்னவென்றால், இப்படிப்பட்ட துஆ செய்யும் போது இறைவன் அதனை ஏற்றுக் கொள்கிறான் அல்லது அதற்குப் பதில் அளிக்கிறான். அதாவது இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றோ அல்லது இந்த துஆ இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படாது என்றோ தெரிவிப்பான். எனவே, இதுதான் துஆவின் உண்மைத்தன்மை ஆகும்.

ஒரு சடங்கைப் போன்று துஆ செய்யாதவர்கள் அதிர்ஷ்டசாலிகள் ஆவார்கள். அவர்கள், இறைவன் மீது முழுமையாக நம்பிக்கை கொண்டவாறு, இறைவன் துஆவை ஏற்றுக் கொள்கின்றான் என்று நம்பிக்கை கொண்டவாறு, முழு ஈடுபாட்டுடன் துஆ செய்வார்கள். அல்லாஹ்விடம் ஏதாவது ஒரு விசயத்தில் உதவி மற்றும் வழிகாட்டுதல் வேண்டுவதற்காகவோ அல்லது தனது கஷ்டங்களுக்கு தீர்வு காண்பதற்காகவோ அல்லது இறைவனது அருள்களுக்கு வாரிசாக வேண்டும் என்பதற்காகவோ துஆ செய்வார்கள். அதாவது, இவை அனைத்தும் நிறைவேற வேண்டும் என்றால் ஒரு மனிதர் தனது அனைத்து ஆற்றல்கள் மற்றும் சக்திகளுடன் இறைவன் முன்பு குனிய வேண்டும்; அவனிடம் துஆ கேட்க வேண்டும். இன்று வரை இதுதான் நமது அனுபவமாக உள்ளது. இறைவன் இப்படிப்பட்ட துஆக்களை ஏற்றுக் கொள்கிறான் அல்லது துஆ கேட்கக்கூடியவர்களின் விருப்பத்திற்கேற்ப இல்லையென்றாலும் திருப்தி அடைவதற்கான வழிகளை அவன் காண்பிப்பான்.

**பிறகு, துஆவின் அதப் - ஒழுக்கங்களை விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

துஆ மிகவும் அற்புதமான ஒன்றாகும். ஆனால் வருத்தம் என்னவென்றால், துஆ செய்யக் கூடியவர்கள் துஆவின் ஒழுக்கங்களை தெரிந்திருப்பதில்லை. மேலும் இந்தக் காலத்தில் துஆ செய்யக் கூடியவர்கள் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வழிகளையும் அறிந்திருப்பதில்லை.

கூறுகின்றார்கள்: உண்மை என்னவென்றால், துஆவின் உண்மைத்தன்மையில் இருந்து முற்றிலும் அறிமுகம் இல்லாமல் போய் விட்டது. சிலர் துஆவை முற்றிலும் மறுக்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள்.

மேலும் சிலர் துஆவை மறுக்கக் கூடியவர்களாக இல்லை என்றாலும் அவர்களது நிலைமை எவ்வாறாக உள்ளது என்றால், அவர்களது துஆ, துஆவின் அதபுகளை அறியாததன் காரணத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஏனென்றால் அவர்களது துஆ அதன் உண்மையான பொருளின்படி துஆவாக இருப்பதில்லை. அதாவது துஆவின் ஒழுக்கங்களை அறியாததினால் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

கூறுகின்றார்கள்: உண்மை என்னவென்றால், துஆ அதன் அசல் பொருளின்படி துஆ செய்யப்படுவதே இல்லை. இதனால் இவர்கள் துஆவை மறுப்பவர்களை விட மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களது செயல் அவர்களை நாஸ்திகத்தின் பக்கம் கொண்டு சென்று விட்டது. துஆவிற்கான முதல் அவசியமாவது, துஆ செய்யக்கூடியவர் ஒருபோதும் சோர்வடைந்து அவநம்பிக்கை அடையக் கூடாது. மேலும் அல்லாஹ்வின் மீது தப்பெண்ணம் கொள்ளக் கூடாது. அதாவது இனி ஒன்றும் நடக்காது என இறைவன் மீது தப்பெண்ணம் கொள்ளக் கூடாது. நான் மிக நீண்ட காலம் துஆ செய்து விட்டேன். ஆனால், எதுவுமே நடக்கவில்லை என தீய எண்ணம் கொள்ளக் கூடாது.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆவுடைய உண்மைத் தன்மை மற்றும் ஒழுக்கங்களின் இந்த அறிவை நமக்கு தந்திருக்கின்றார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக முதலில் தனது சஹாபாக்களுக்கு இந்த அறிவை தந்திருக்கின்றார்கள். மேலும் அவர்களுக்கு நேரடியாக தர்பிய்யத் வழங்கியிருக்கிறார்கள். மேலும், அன்னாரின் வருகையின் மூலம் உலகில் ஒரு புரட்சி ஏற்பட்டது. இறைவன் புறமிருந்தும் ஒரு திட்டம் செயல்பட்டது. அது இறைவன் யாரையெல்லாம் சீர்திருத்த விரும்பினானோ அவர்களிடமும், துஆவின் உண்மைத்தன்மை மற்றும் துஆவின் ஒழுக்கங்களைப் பற்றிய அறிவை ஏற்படுத்தியது. இதன் மூலம் அன்னார் மீது அவர்களது ஈமான் மேலும் வலுப்பெற்றது.

தற்போது நான் அன்னாரது காலத்தில், அன்னாரிடமிருந்து பலன் பெற்ற சில சஹாபாக்களைப் பற்றி கூறுவேன். இவர்கள் துஆவின் உண்மைத்தன்மையை அறிந்திருந்தார்கள். மேலும் அல்லாஹ் அவர்களுக்கு அவர்களது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான காட்சிகளையும் காண்பித்தான். இதன் மூலம் அவர்களது ஈமானும் வலுப்பெற்றது. மேலும் அவர்கள் மற்றவர்கள் நேர்வழியினை அடைவதற்குக் காரணமாகவும் அமைந்தார்கள்.

**ஹஸ்ரத் மியான் முஹம்மது நவாஸ் கான் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

1906ல் ஸியால்கோட்டில் பிளேக் நோய் மிகவும் அதிகமாக பரவி இருந்தது. போக்குவரத்து நிறுத்தப்பட்டு விட்டது. எல்லாப் பகுதியிலும் சடலங்களே தென்பட்டது. மவ்லவி முபாரக் சாஹிப் மவ்லா பக்ஷ் சாஹிபின் வீட்டில் தர்ஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். நான் படுத்திருந்தேன். எனக்கு பிளேக் நோயின் கட்டிகள் வந்தன. நான் துஆ செய்தேன். இறைவா! நான் உன்னால் அனுப்பப்பட்டவரை ஏற்றுக் கொண்டேனே! எனக்கும் கட்டிகள் வந்துள்ளனவே என்றேன். நான் இப்போது இறந்து விடுவேனே! என்றேன். ஆனால் இறைவனது வல்லமை விடிவதற்குள் அந்த கட்டிகள் மறைந்து விட்டன. மேலும் எனது நண்பர் முஹம்மது ஷாஒருவர் இருந்தார். அவரை நான் பார்த்தேன். அவர் மரணித்துக் கிடந்தார். நானும், முஹம்மது ஷா –வும் ஒரே அறையில் தான் இருந்து வந்தோம்.

**அடுத்து, கலீஃபா நூருத்தீன் சாஹிப் ஜம்முவைச் சேர்ந்தவர் கூறுகின்றார்கள்:**

நான் ஒருமுறை ஜம்முவிலிருந்து நடந்து குஜ்ராத் வழியாக காஷ்மீர் சென்றேன். வழியில் குஜ்ராத் அருகில் ஒரு காட்டில் தொழுது விட்டு அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக்க மினல் ஹம்மி வல் ஹுஸ்னி என்ற துஆவை மிகவும் உருக்கத்துடன் வேண்டினேன். இறைவா! என்னுடைய நிலையை சீர்படுத்துவாயாக! என துஆ செய்தேன். அதன் பிறகு இறைவன் எனது வருமானத்திற்கான வழியினை எவ்வாறு ஏற்படுத்தினான் என்றால், எனக்கு ஒருபோதும் வறுமை ஏற்படவேயில்லை. ஏதேனும் சிறந்த வியாபாரம் எதுவும் செய்யாமல் மறைவிலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய்கள் என்னிடம் வந்தன.

**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப் கூறுகின்றார்கள்:**

1915-ல் நான் எனது குடும்பத்துடன் காதியானில் இருந்த போது, எனது மகன் அப்துல்லாஹ் கானுக்கு பிளேக் நோய் ஏற்பட்டது. இரண்டு நாள் காய்ச்சல் மோசமானதாக இருந்தது. நான் மாலை 4.00 மணியளவில் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய போது, அவனது நிலை மிகவும் கவலைக்குரியதாக இருந்தது. அந்நேரத்தில் இவன் மட்டும் தான் எனது பிள்ளையாக இருந்தான். தாய் பல நாட்களாக தனது மகனது கஷ்ட நிலையைக் கண்டு கவலையடைந்து கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் தேம்பி, தேம்பி அழ ஆரம்பித்தாள். என்னிடம் பிள்ளையை தந்தாள். அது மிகவும் கோடை காலமாகும். மிகவும் சிறிய வீடு, தனிமை போன்றவை பயத்தினை மேலும் அதிகரித்தது. வசதியில்லாத வீடு, கோடை காலம், தனிமை மேலும் பிள்ளையும் மிகவும் அதிகமாக நோய்வாப்பட்டிருக்கிறான். இதன் காரணமாக பதற்றம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. நான் குழந்தையை எடுத்து, எனது மார்போடு அணைத்துக் கொண்டேன். குழந்தையின் மோசமான நிலைமை மற்றும் எனது ஆதரவற்ற நிலையை எண்ணி, என்னையும் அறியாமல் கண்களிலிருந்து கண்ணீர் அடக்க முடியாமல் வடிய ஆரம்பித்தது. இந்த கஷ்டமான நேரத்தில் இறைவா! எனது அன்பிற்குரிய இறைவா! இந்த கஷ்டமான நேரத்தில் உன்னைத் தவிர வேறெவரும் துக்கத்தைப் போக்கக் கூடியவரோ, மருத்துவரோ இல்லை. நீ மட்டும் தான் நிவாரணம் அளிக்கக் கூடியவன் ஆவாய் என திரும்பத் திரும்ப துஆ செய்து கொண்டிருந்தேன்.

இந்த நினைப்பில் நான் எந்த அளவு மூழ்கினேன் என்றால், திடீரென்று எனது உள்ளத்தில் இந்த எண்ணம் தோன்றியது. அதாவது, நீ திருக்குர்ஆனில் கூறியுள்ள குல்னா யா நாரு கூனி பரதவ் வ ஸலாமா அலா இப்ராஹீம் என்ற துஆவை ஓதி, உனது கையை குழந்தையின் தலையிலிருந்து பாதம் வரை கொண்டு வா! இதனை திரும்பத் திரும்ப செய்! என தோன்றியது. எனவே நான் அழுதவாறு ஈரமான கண்களுடன் அவ்வாறே செய்தேன். சில நிமிடத்திலேயே குழந்தையின் காய்ச்சல் குறைந்தது. வெறும் கட்டி மட்டும் எஞ்சியிருந்தது. மறுநாள் கட்டி அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. நான்கு, ஐந்து நாட்களில் குழந்தை முழுவதுமாக குணமடைந்தான்.

**ஹஸ்ரத் சவுத்ரி அமீர் முஹம்மது கான் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

நான் எனது மனைவிக்கு ஹோஷ்யார்பூர் மருத்துவமனையில் மருத்துவம் செய்து ஒரு நீண்ட காலம் கழிந்தது. மூன்று முறை காலில் அறுவை சிகிச்சை செய்தும், கால் குணமடையவில்லை. கருணை உள்ளம் கொண்ட ஒரு ஆங்கிலேய செவிலி ஒருவள் இருந்தாள். அவள் ஒருநாள் எங்களிடம் நீங்கள் அனுமதி கொடுத்தால் உங்களுடைய காலை கணுக்கால் வரை வெட்டி எடுத்து விடலாம் என்றார். ஏனென்றால் இதுவரை இந்தக் கால் குணமடையவில்லையே என்றாள். Gangrene உடைய நிலை போன்று உள்ளது. நோய் கணுக்காலுக்கு மேலே சென்று விடக்கூடாதே என்றாள். நானும் வீட்டில் உள்ளவர்களிடம் ஆலோசனைக் கேட்டு அனுமதி வழங்கினேன். அந்த செவிலி, எனது மனைவியை கணுக்கால் வெட்டப்பட வேண்டிய மற்றொரு அறைக்கு கொண்டு சென்றாள். நான் உடன் செல்வதற்கு செவிலி சாஹிபாவிடம் அனுமதி கேட்டேன். இந்த அறுவை சிகிச்சை எனது மனைவிக்கு நடக்கவிருந்து - அவர் என்னை இங்கேயே இருக்கும்படி கூறினாள்.

எனவே நான் அங்கேயே உளூ செய்து விட்டு, தக்பீர் கூறி தொழுகையில் ஈடுபட ஆரம்பித்தேன். மனைவிக்கு அறுவை சிகிச்சை செய்வதற்காக அழைத்துச் சென்றிருந்தார்கள. நான் நஃபில் தொழுகையில் துஆவில் மூழ்கினேன். என்னுடைய எண்ணம் இறைவா! நீ வல்லமை படைத்தவன் ஆவாய். நீ விரும்புவதை செய்யக் கூடியவனவாய். எனவே நீ இப்போது கால் வெட்டப்படுவதிலிருந்து காப்பாற்றுவாயாக! ஏனென்றால் கால் வெட்டப்பட்டால் வாழ்நாள் முழுவதும் ஒரு குறையாகவே அது இருக்கும். உன்னால் முடியாத செயல் எதுவும் இல்லை. இந்த எண்ணத்துடன் ஸஜ்தாவில் முழுவதுமாக உருக்கத்துடன் மன்றாடினேன். அப்போது பாதி மயக்க நிலையில் இந்த அழைப்பு வந்தது. ஒரு சப்தம் வந்தது.

லா தக்னத்து மிர் ரஹ்மத்தில்லாஹ் - அதாவது அல்லாஹ்வின் கருணை மீது ஒருபோதும் நம்பிக்கையிழக்க வேண்டாம். இந்த சப்தம் கேட்டவுடன் நான் ஸஜ்தாவிலிருந்து தலையை உயர்த்தினேன்.

நான் என்ன பார்த்தேன் என்றால், செவிலி சாஹிபா என்னை நோக்கி ஓடி வந்து, சிவில் சர்ஜியன் சாஹிப் இந்த முறை காயங்களை நானே தூய்மை செய்கின்றேன் என்றும், காலை வெட்டமாட்டேன் என்றும், காலை எப்போது வேண்டுமானாலும் வெட்டலாம்; ஆனால் வெட்டப்பட்ட காலை ஒட்ட வைப்பது முடியாததாகும் எனக் கூறியதாக என்னிடம் கூறினாள். இறைவனது இந்த வல்லமையின் வெளிப்பாடு மற்றும் இந்த அருளுக்கு அர்ப்பணமாகிறேன். அவன் இந்த இக்கட்டான நேரத்தில் லா தக்னத்து என்ற நற்செய்தியை அறிவித்து அற்புதத்தை வெளிப்படுத்தினான். அவரது மனைவி கால் வெட்டப்படுவதிலிருந்து காப்பாற்றப்பட்டாள்.

**ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

1925 -ல் ஒருமுறை அஞ்சுமனில் அதிக செலவுகள் ஆனதன் காரணமாக ஆட்குறைப்பு செய்யப்பட்டது. நானும் அதன் கீழ் வந்தேன். வீட்டின் தேவைகள் என்னை அதிகமாக கஷ்டப்படுத்தியது. நான் இந்த வறுமையில் இறைவனது சன்னதியைத் தவிர வேறு எதனையும் உதவி புரியக்கூடியதாக காணவில்லை. எனவே அவனிடமே குனிந்தேன். அப்போது ரமலான் மாதமும் வந்தது. இதில் அதிக அளவு துஆ செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. பிறகு இஃதிகாஃபில் மேலும் உருக்கத்துடன் துஆ செய்ய வாய்ப்புகள் கிடைத்தன.

அப்போது பஞ்சாபியில் இல்ஹாம் இறங்கியது: தம் வட் ஸமானா கட். வலேதின் ஆவன்கே இந்த நற்செய்தி வந்தும் கூட பல நாட்களாக வறுமை மிகவும் வாட்டியது.

மீண்டும் நற்செய்தி பார்ஸியில் வந்தது: கம் மகூஸ் ஆன்கே தரியின் தஷ்வீஷ் ஹூர்மி வஸல் யார் மே பீனம்.

இந்த நற்செய்தி வந்த சில நாட்களுக்குப் பிறகு எனக்கு ஆண் குழந்தையை வழங்கினான். அவனது பெயர் மஹ்மூது அஹ்மது ஆகும். அதற்கு பிறகு நான் ஆகஸ்டு, 1926 -ல் காஸியாத் காவல்நிலையத்தில் 90 ரூபாய் மாத வருமானத்தில் துணை ஆய்வாளர் ஆனேன். அதாவது இறைவன் மாதம் 30 ரூபாய்க்குப் பதிலாக மாதம் 90 ரூபாய் வருமானத்தை வழங்கினான்.

ஹஸ்ரத் பாபு அப்துர் ரஹ்மான் சாஹிப், ஹஸ்ரத் சவுத்ரி ருஷ்தம் அலி சாஹிபுடன் தனது ஒரு பயணத்தைப் பற்றி கூறுகின்றார்கள்:

நானும், சவுத்ரி சாஹிப் மற்றும் இரண்டு மூன்று அஹ்மதிகளும் ஒரு குதிரை வண்டியில் அமர்ந்து காதியான் வந்தடைந்தோம். இந்தப் பாதையினை முதன் முறையாகக் கண்டோம். எந்த அளவுக்கு சோர்வடைந்தோம் என்றால் வண்டி அதிகமாக குலுங்கியதன் காரணமாக உடல் வலி அதிகமாக இருந்தது. வழிப்பாதை அனைத்தும் குண்டும் குழியுமாக இருந்தது. பாதைகள் பண்படுத்தப்படாமல் சவக்குழிகளைப் போன்று காணப்பட்டன. இந்தப் பாதையில் குதிரை வண்டியிலும், நடந்தும் காதியான் வந்து சேர்ந்தோம். காதியான் வந்தடைந்ததும் விருந்தினர் அறையில் நாங்கள் தங்கினோம். அதற்குப் பிறகும் நானும் சவுத்ரி சாஹிபும் ஹுஸூரை சந்தித்தோம். ஹுஸூர் அவர்கள் சிறிய பள்ளியாக இருந்த மஸ்ஜித் முபாரக்கின் மாடியின் வடக்குப் பகுதியில் அமர்ந்திருந்தார்கள். ஏறக்குறைய 10 அல்லது 12 மற்ற சகோதரர்களும் கூடி இருந்தனர். அதில் மவ்லவி ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் மற்றும் மவ்லவி அப்துல் கரீம் சாஹிபும் இருந்தனர். முஸாபா செய்த பின்னர் சவுத்ரி சாஹிப் என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள். நான் சிறிய தொகை ஒன்றை கைக்குட்டையில் கட்டி ஹுஸூரிடம் கொடுத்தேன். ஹுஸூர் கைக்குட்டையை வாங்கி வைத்துக் கொண்டார்கள். சிறிது நேரம் கழித்து என்னுடைய விண்ணப்பத்திற்கிணங்க ஹுஸூர் அவர்கள் என்னிடம் பைஅத் வாங்கினார்கள். பைஅத் செய்த பிறகு வந்திருந்த அனைவரும் துஆ செய்தனர்.

பிறகு நாங்கள் ஹுஸூரிடமிருந்து விடைபெற்று, பண்படுத்தப்படாத பாதையில் பயணம் மேற்கொண்டு பட்டாலா வந்தடைந்தோம். பட்டாலாவிலிருந்து இரயிலில் பயணம் செய்து வீட்டிற்கு வந்தடைந்தோம்.

வீடு கட்டுமானப் பணி நடந்து கொண்டிருக்கும் போது அதனை விட்டு விட்டு காதியான் சென்றோம். பிறகு திரும்பி வந்து எனது வீட்டின் கட்டுமானப் பணியைத் தொடங்கினேன். கீழ்தளம் கட்டப்பட்ட பின்பு மேல் பகுதியில் வீடு கட்ட ஆரம்பித்த போது திடீரென நான் உடல்நலம் குன்றிப் போனேன். காய்ச்சலின் அளவு 104 டிகிரி வரை சென்றது. இதுபோன்று பல நாட்கள் கழிந்தன.

சவுத்ரி ருஷ்தம் அலி சாஹிப் உடல்நலம் விசாரிப்பதற்காக தினந்தோறும் வருவார்கள். வந்து ஆறுதல் வழங்குவார்கள். அவர் நான் தினமும் ஹுஸுர் அவர்களுக்கு துஆவிற்காக எழுதுகின்றேன் என்றார். ஒருநாள் பகலில் எனக்கு கனவின் மூலமாக தெரிவிக்கப்பட்டது. அதாவது, ஏற்கனவே வஃபாத் ஆன எனது சகோதரி துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூறுகிறார். கண் விழித்ததும் நான் எனது மனைவி, எனது சகோதரன் மற்றும் பிள்ளைகளிடம் கூறினேன். எனது சகோதரி இங்கு நின்றிருந்தாள். மேலும் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது என கூறினாள் என்றேன். ஆனால் அதற்கு பின்பு நடந்தது என்னவென்றால், காய்ச்சலின் வேகம் மேலும் அதிகரித்துக் கொண்டே சென்றது. நான் பல நாட்கள் வரை சுயநினைவற்றுக் கிடந்தேன். வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் வருத்தம் அடைந்தார்கள். குறிப்பாக சவுத்ரி ருஷ்தம் அலி சாஹிபுக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஒருவேளை இப்பொழுது வஃபாத் நடைபெற்றால், அனைவரும் இது பைஅத் செய்ததனால் வந்த விளைவாகும் என்று கூறுவார்கள். இதன் மூலம் வீட்டில் உள்ளவர்களிடமும் இவருடன் பைஅத் செய்த நண்பர்களிடமும் மிகவும் மோசமான தாக்கம் ஏற்படும். சவுத்ரி சாஹிப் மர்ஹூம் துஆவில் ஈடுபட்டார்கள். உடல்நலம் பெறுவதற்காக ஒவ்வொரு நாளும் ஹுஸுருக்கு கடிதம் எழுதி வந்தார்கள்.

இறைவனுக்கு நன்றி! எனக்கு நிவாரணம் கிடைக்கத் தொடங்கியது. ஒரு மாதத்திற்குள் முழுவதுமாக குணமடைந்தேன். நாங்கள் பெருநாள் தொழுகையை கடையில் தொழுதோம். அல்ஹம்துலில்லாஹ்!

அல்லாஹ் கனவில் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது என கூறினான். அது முழுமை அடைந்து விட்டது.

**ஹஸ்ரத் ஹாஃபிஸ் முபாரக் அஹ்மது சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்கள் மவ்லவி கான் மலிக் கான் அவர்களுக்கு தனிப்பட்ட கண்ணியம் அளித்து வந்தார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் கான் மலிக் கான் சாஹிப் கூறி வந்தார்கள். மவ்லவி சாஹிப் மாணவராக இருந்த காலத்தில் துஆ செய்யுங்கள். நான் பெரிய மனிதனாக வேண்டும் என கூறி வந்தார்கள். பெரிய மனிதனாக வேண்டும் என்பது மார்க்கத்தில் முன்னேற வேண்டும் என்பதாகும்.

கூறுகின்றார்கள்: நான் கலீஃபாவுடைய இந்தக் கூற்றைக் கேட்டு அவருக்காக அதிகமாக துஆ செய்து வந்தேன். நான் மவ்லவி சாஹிபிற்காக துஆ செய்தேன். மேலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான அடையாளங்களையும் கண்டு அன்னாருக்கு எடுத்துக் கூறினேன். நீங்கள் பெரிய மார்க்கப் பெரியவராகி விடுவீர்கள். அதாவது துஆ செய்வதன் மூலம் மார்க்கத்தில் பெரிய மனிதராக வேண்டும் என்பதுதான் அவரது விருப்பமாக இருந்தது.

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் அப்துஸ் ஸத்தார் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஹுஸுருடைய முன்னறிவிப்பு, அஃபதித் தியாரு மஹில்லுஹா வ முக்காமுஹா – வுக்குப் பிறகு, அதாவது தற்காலிக குடியிருப்புகளும் அழிந்து விடும். நிரந்தரமான குடியிருப்புகளும் அழிந்து விடும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இல்ஹாம் ஆகும்.

கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு பூகம்பத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பு எனக்கு கனவு வந்தது. அதில் ஹுஸுர் அவர்கள், எங்கள் வீட்டில் எங்களது கட்டிலில் அமர்ந்திருந்தார்கள். அப்போது நான் கூறினேன். எனது கிராமத்துவாசிகள் எனக்கு மிகவும் அதிகமாக கஷ்டங்களைக் கொடுக்கின்றார்கள். தாங்கள் எனக்காக துஆ செய்யுங்கள். அதற்கு ஹுஸுர் அவர்கள் பஞ்சாபியில் கூறினார்கள்.

மே தே ஏஹோயி கம் கர்னா ஹோனா அதாவது, நான் இந்த வேலையைத் தான் செய்கின்றேன் என அவருக்கு கனவில் கூறப்பட்டது. அப்போது மீண்டும் நான் ஹுஸூரிடம், எனக்காக தனியாக துஆ செய்யுமாறு வேண்டினேன். ஹுஸூர் அவர்கள் எனது இடது கையைப் பிடித்தவாறு ஒரு கையினாலேயே துஆ செய்யத் தொடங்கினார்கள் (கனவில்). நான் இரண்டு கைகளாலும் துஆ செய்யத் தொடங்கினேன். துஆ செய்து கொண்டிருந்த போதே, மிகவும் மோசமான பூகம்பம் வந்தது. நான் விழப் போனேன். ஆனால் ஹுஸூர் அவர்களை நான் இருக்கமாகப் பிடித்துக் கொண்டேன். அன்னாரின் விலாப் பகுதியின் அருகே வந்தேன். இவ்வாறு கனவில் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எனக்கு விழிப்பு வந்தது.

காலையில் நான் காதியான் வந்தேன். ஹுஸூர் அவர்கள் தோட்டத்தில் பெரிய கூடாரம் ஒன்றை அமைத்திருந்தார்கள். நான் கூடாரத்தின் அருகில் சென்ற போது, ஹுஸூர் அவர்கள் வெளியில் நடந்து கொண்டிருந்தார்கள். நான் ஸலாம் கூறி முஸாபா செய்தேன். நான் ஒரு கனவைக் கூற விரும்புகின்றேன் என்றேன். அதற்கு ஹுஸூர் அவர்கள் அனுமதி வழங்கினார்கள். இந்தக் கனவை நான் ஹுஸூரிடம் கூறினேன். ஹுஸூர் அவர்கள், 'நீர் காப்பாற்றப்படுவீர்' என்ற இந்த வார்த்தையை ஏறக்குறைய மூன்று முறை கூறினார்கள்.

கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு எனது வீட்டில் பிளேக் நோய் ஏற்பட்டது. எனது மனைவி மற்றும் எனது மகள் ஆகிய இருவருக்கும் பிளேக் நோய் ஏற்பட்டது. இங்கு தினமும் 10 முதல் 12 பேர் மரணிக்கின்றார்கள். நீர் இறந்து விட்டால் உனக்கு யார் கபர் தோண்டுவார்? ஏனென்றால் அஹ்மதிகளுக்கு அருகில் எவரும் வரமாட்டார். உனது ஜனாஸாவை யார் எடுப்பார்? யார் குளிப்பாட்டுவார்? என மக்கள் கூறினர். அதற்கு நான், எங்களை இறைவனிடம் விட்டு விடுங்கள். எனது மனைவி மரணத் தருவாயில் இருக்கிறாள். நான் உளு செய்து விட்டு இறைவனிடம் இவ்வாறு துஆ செய்தேன். இறைவா! எங்களுக்கு கபர் தோண்டக் கூட எவரும் இல்லை. எங்களுக்கு தூக்கக்கூடியவர், குளிப்பாட்டக் கூடியவர் எவரும் இல்லை. அப்பொழுது என்னிடத்தில் ஆரஞ்சுப் பழம் இருந்தது. அதனை உரித்து மனைவியின் வாயில் போட்டுக் கொண்டிருந்தேன். அவள் அதனை சாப்பிட்டு முடித்ததும் எனது மனைவிக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. அதனுடன் காய்ச்சலும் குணமானது. எனது மகளது கட்டிகளில் எருக்கன் பாலை இட்டேன். எருக்கன் என்பது ஒரு செடியின் பெயராகும். அவளுக்கு நிவாரணம் கிடைத்தது. பிறகு இறைவனிடம் நான் துஆ செய்ய ஆரம்பித்தேன். பஞ்சாபியிலேயே துஆ செய்தேன். நான் அல்ஹம்து ஓதினேன். அப்போது எனது நாவிலிருந்து இந்த வார்த்தைகள் தாமாகவே வெளிப்பட்டன.

குல் சீரு ஃபில் அர்ழி கைஃபா கான ஹாஃபிளூன் அலைஹி.

இதன் மூலம் எனது மனைவியும், எனது மகளும் காப்பாற்றப்பட்டார்கள். அப்போது ஹுஸூருடைய கூற்று எனக்கு நினைவுக்கு வந்தது. 'நீர் காப்பாற்றப்படுவீர்' என்று மூன்று முறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். இறை அருளால் அவர் காப்பாற்றப்பட்டார்.

**ஹஸ்ரத் மீர் மெஹ்தி ஹுஸைன் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருநாள் நடந்த சம்பவம். நான் சுபுஹ் தொழுகையைத் தொழுது விட்டு மஸ்ஜிது முபாரக்கிலிருந்து பீர் சிராஜுல் ஹக் சாஹிபுடன் அவர்களுடைய வீட்டின் படியில் நின்று கொண்டிருந்தேன். பீர் சாஹிப் யாரையோ பற்றி பெரிய கதை கூறிக் கொண்டிருந்தார்கள். எனது மறைவான அறிவின் மூலம் எனக்கு தெரிய வந்தது என்னவென்றால், எனது உயிர் ஆபத்தல் உள்ளது. அதாவது அவருக்கு ஓர் உணர்வு ஏற்பட்டது. நான் இந்நாட்களில் ஹுஸூரின் வீட்டிற்கு காவலாளியாக இருந்தேன். நான் அங்கிருந்து ஓடினேன். எனக்கு முன்பு முஹம்மது அக்பர் கான் சனோரி சில பொருட்களை பஸாரிலிருந்து வாங்கி வீட்டிற்குள் நுழைந்தார். மேலும் ஹுஸூர் அவர்கள் மேலிருந்து கீழே இறங்கி வந்தார்கள். மியான் மெஹ்தி ஹுஸைன் இருக்கின்றாரா? என்றார்கள். அக்பர் கான் இல்லை என பதிலளித்தார். அவர் ஏதாவது கடைகளில் நிற்பார் என்றார். நான் உடனே உள்ளேன் எனக் கூறினேன். அக்பர் கான் சாஹிப் இவர் எங்கிருந்தாவது வந்திருப்பார் என்றார்.

ஹுஸுர் அவர்கள் என்னிடம், இந்த திருக்குர்ஆனைக் கொண்டு செல்லுங்கள். இந்தக் கருத்தை உடைய வசனத்தை கண்டறிந்து அடையாளமிட்டுக் கொண்டு வாருங்கள் என கட்டளையிட்டார்கள். அப்போது எனது நிலைமை எவ்வாறு இருந்தது என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த வசனத்தை தேடினார்களோ அதனை நானே கண்டறிந்து காண்பிக்க வேண்டும் என ஆசைப்பட்டேன். ஆனால் எனக்கு அது சாத்தியமற்றதாகத் தோன்றியது.

பிறகு நான் இறைவனிடம் துஆ செய்தேன். எவ்வாறு அல்லாஹ் உடனடியாக துஆவை ஏற்றுக்கொண்டான் என்றால், நான் அங்கு நின்றவாறே இறைவனிடம் அந்த வசனத்தை எனக்கே தெரியப்படுத்த வேண்டும் என்று துஆ செய்தேன். இவ்வாறு துஆ செய்த பிறகு நான் திருக்குர்ஆனை திறந்தேன். அப்போது எனது முதல் பார்வை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தேவைப்பட்ட அந்த வசனத்தின் மீது பட்டது. நான் ஹுஸுரிடம், வசனம் இதோ இருக்கிறது என்றேன். அதற்கு ஹுஸுர் அவர்கள், ஹக்கீம் ஃபஸ்ல் தீன் சாஹிபிடம் கேட்டு வாருங்கள் என்றார்கள். அதாவது ஹக்கீம் ஃபஸ்ல் தீன் சாஹிபிடம் சென்றுதான் அந்த வசனம் எங்கு உள்ளது? என அடையாளமிட்டு வரச் சொல்லியிருந்தார்கள்.

நான், ஹுஸுர் வசனம் இதோ இருக்கிறது எனறேன். பிறகு ஆம்! ஹக்கீம் ஃபஸ்ல் தீன் சாஹிபிடம் சென்று கேட்டு வாருங்கள் என்றார்கள். பிறகு மீண்டும் நான், ஹுஸுர் வசனம் இங்கே இருக்கிறது. ஹக்கீம் ஃபஸ்ல் தீன் சாஹிபிடம் கேட்க வேண்டியது என்ன இருக்கிறது? என்றேன்.

பிறகு ஹுஸுர் அவர்கள், எனது கையிலிருந்த திருக்குர்ஆனை வாங்கி அந்த வசனத்தைப் படித்தார்கள். பிறகு ஆம்! இதுதான் எனக் கூறினார்கள். அதன் பின்னர் மேல் பகுதிக்குச் சென்று விட்டார்கள்.

**ஹஸ்ரத் ஹாஃபிஸ் குலாம் ரஸுல் சாஹிப் வஸீராபாதி அறிவிக்கின்றார்கள்:**

எனக்கு தொடர்ந்தும், முழுமையாகவும் நினைவில் இல்லை. மாறாக, பொதுவாக எனக்கு இது நினைவில் வந்தது. கடந்த விவாதத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சார்பாக ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டது. சர்வ சமய மாநாட்டைப் பற்றியதாக அது இருந்தது. அதில் ஹுஸுருடைய இல்ஹாம் எனது கட்டுரை அதாவது இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் மேலானதாக இருக்கும் என்பதாக இருந்தது. நான் அப்போது, சில காரணங்களால் நோயாளியாக இருந்தேன். ஹுஸுர் அவர்களின் இந்த வாதம் அதாவது எனது கட்டுரை அனைவரையும் விட மேலானதாக இருக்கும் என்பது மிகப்பெரிய வாதமாகும். இறைவனது உதவி இல்லாமல் யாரால் இவ்வாறு கூற முடியும்?

கூறுகின்றார்: நான் ஒரு அஹ்லே ஹதீஸ் மவ்லவியை லாஹுரிலிருந்து கஷ்டப்பட்டு மாநாடு நடக்கும் இடம் வரை அழைத்து வந்தேன். அவர் மவ்லவி ஸனாவுல்லாஹ், மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலாவி போன்றோரின் உரைகளைக் கேட்டார். அது எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாத வகையில் இருந்தது. ஆனால் ஹுஸுரின் உரை தொடங்கியதும், கால் வைக்க இடமில்லை. மக்கள் எவ்வளவு அமைதியாகக் கேட்டார்கள் என்றால், எந்த விதமான சப்தமும் எழவில்லை. மேலும் பல அறிஞர்கள் மிர்ஸா சாஹிபின் உரையைக் கேட்பதற்காக தனது நேரத்தையும் அர்ப்பணித்தார்கள். நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் இரண்டு நாட்கள் அதிகமாக்கப்பட்டன. உரை முடிவை எட்டிய போது அப்போது நான் அதே இடத்திலேயே இறைவனிடம் துஆ செய்தேன். அல்லாஹ் நல்லியல்பு கொண்டவர்களுக்கு எவ்வாறு நேர்வழி காட்டுகின்றான் என்பதைப் பாருங்கள்!

அல்லாஹ்வே! இவர் உனது அன்பிற்குரிய ரஸுல் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அதே நபர் என்றால், அவரது பரக்கத் மூலம் எனது இந்த நோயைக் குணப்படுத்துவாயாக என்று துஆ செய்தேன்.

மாநாடு முடிந்த பிறகு நான் மாநாட்டின் பெரிய வாயில் வழியாக வெளியே வந்தபோது அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு எந்தவிதமான நோயும் இல்லை என தோன்றியது. அன்று முதல் இன்று வரை அந்த நோய் எனக்கு மீண்டும் வரவே இல்லை. இவ்வாறு இவர் அஹ்மதி ஆனார்.

**ஹஸ்ரத் அல்லாஹ் பக்ஷ் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

கரம் தீன் சாஹிபுடைய வழக்கின் ஆரம்பத்தில் ஆரிய சமாஜ் உடைய சந்து லால் நீதிபதியாக இருந்தார். எனது ஒரு ஆரிய சமாஜ் நண்பர் கிர்தாரி லால் கணக்கராக இருந்தார். இவர் என்னிடம் வந்து, எங்களது கமிட்டியில் மிர்ஸா சாஹிபுக்கு மிகவும் கடினமான தண்டனை வழங்க வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றார். இதனைக் கேட்டதும் நான் ஹுஸூர் அவர்களிடம் இதனை எடுத்துரைத்தேன்.

அன்னார், துஆ செய்யுங்கள் என்றார்கள். பிறகு நான் அங்கிருந்து திரும்பி வந்து விட்டேன். நான் அமிர்தசரஸ் சென்ற போது, காலையில் சுபுஹ் தொழுகைக்கான நேரமாக இருந்தது. நான் மஸ்ஜிதுக்கு சென்றேன். மஸ்ஜிது உடைய விரிப்பில் உட்கார்ந்திருந்தேன். ஸலவாத் ஓதிக் கொண்டிருந்தேன். எனக்கு வலது காது கேட்காது; இப்போதும் கேட்காது. ஆனால் அப்போது எனது வலது காதில் மிகவும் சப்தமாக தீர்ப்பு வழங்குவதற்கு முன்பாக சந்து லால் மரணமடைந்து விடுவார் என்ற சப்தம் கேட்டது. பிறகு நான் ஹுஸூரிடம் வந்து இந்தக் காதில் மிகவும் சப்தமாக தீர்ப்பு வழங்குவதற்கு முன்பாக சந்துலால் மரணித்து விடுவார் என கேட்டது என்றேன். அன்னார் இதனை நற்செய்தி, நற்செய்திக் கனவு எனக் கூறினார்கள். துஆ செய்யுங்கள் என்றார்கள்.

இதற்குப் பிறகு நான் கனவில், ஒரு முஸ்லிம் மாஜிஸ்ரேட் இருக்கிறார். அவர் ஆத்மராமிவிற்கு வெள்ளை நிற டம்ளரில் தண்ணீர் கொடுக்கின்றார். எந்த முகம் கனவில் ஆத்மராமாக காண்பிக்கப்பட்டதோ, அதில் அவன் கால் ஊனமுற்றவனாக இருந்தான். இதற்குப் பிறகு தீர்ப்புடைய நாள் வந்த போது நான் குர்தாஸ்பூரில் இருந்தேன். ஒருவர் விடுப்பில் சென்றார். அல்லது இடமாற்றம் செய்யப்பட்டு சென்றார். அவரை வண்டியில் ஏற்றி விடுவதற்கு சில மக்களுடன் ஆத்மராமமும் வந்திருந்தார். நான் கனவில் கண்ட தோற்றத்தில் நான் அவனைக் கண்டேன். பிறகு நான் ஹுஸூர் சாஹிப் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றேன். விரிப்பு விரிக்கப்பட்டிருந்தது. நானும் உட்கார்ந்திருந்தேன். பிறகு ஆத்மராம் ஸ்டேஷனிலிருந்து நீதிமன்றத்திற்கு வந்த போது நாங்கள் உட்கார்ந்திருந்தோம். நீதிமன்றத்தில் நுழைவதற்கு இரண்டே வழிகள் மட்டும் தான் இருந்தன. நான் ஒரு நண்பரிடம் இவர் யார் எனக்கேட்டேன்? இவரிடம்தான் ஹுஸூருடைய வழக்கு உள்ளது என்றார். நான் அவரிடம், இவருடைய முகம் இதற்கு முன்பு எனக்கு காட்டப்பட்டுள்ளது என்றேன்.

மேலும் சந்துலாலைப் பற்றி கூறிவிடுகின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இறைவனிடமிருந்து அறிவிப்பைப் பெற்றிருந்தார்கள்.

ஒருமுறை ஒருவர் கூறினார். சந்துலால் மாஜிஸ்ரேட் உங்களை கைது செய்ய வாய்ப்புள்ளது எனக் கூறினார். அப்போது ஹுஸூர் அவர்கள விரிப்பில் படுத்திருந்தார்கள். உடனே எழுந்து உட்கார்ந்தார்கள். நாம் சந்துலாலை நீதிமன்ற நாற்காலியில் பார்க்க மாட்டோம் என்றார்கள். அந்த வகையில் அவருக்கு பதவி இறக்கம் ஏற்பட்டது. கீழ்ப்பதவிற்கு தள்ளப்பட்டார். முல்தானுக்கு அவர் இடமாற்றம் செய்யப்பட்டார். பிறகு பென்சன் பெற்று லூதியானா வந்தார். அவரது இறுதி முடிவு மிகவும் மோசமானதாக இருந்தது. பைத்தியமாகி அவர் மரணம் அடைந்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் வரும் போது தானும் துஆ செய்வார்கள். இறைவன் புறமிருந்து ஆறுதலும் அளிக்கப்பட்டு வந்தது. இருந்தபோதிலும் தனது சஹாபாக்களிடம் துஆ செய்யுமாறு கூறி வந்தார்கள். மேலும் சஹாபாக்கள் ஏதாவது கனவு ஏதும் கண்டார்கள் என்றால் அதனைக் கேட்டு தாம் விளக்கம் கொடுத்து வந்தார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் நபி சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

நான் பைஅத் செய்த போது, ஹுஸூருடைய இல்ஹாம்களைப் படிப்பதற்கு எனக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. அந்த நாட்களில் ஜமீன்தார் பத்திரிகை மற்றும் வேறு பல பத்திரிகைகளில் ஹுஸூருடைய

இல்ஹாமிற்கு எதிராக எழுதப்பட்டு வந்தது. மேலும் நானும் அதனை அதிக அளவில் படித்து வந்தேன். அதனைப் படித்த பிறகு எனக்கு இல்ஹாமிய நிலை குறித்து குழப்பம் நிலவியது. இல்ஹாம்களைப் பற்றி பத்திரிகைகளில் கூறும்போது எதிரிகளுடைய பத்திரிகைகள் அதற்கு மனதில் தோன்றியபடி எல்லாம் விமர்சனம் செய்து வந்தனர். இதன் மூலம் எனக்கு கஷ்டம் ஏற்பட்டு வந்தது.

அவர் கூறுகின்றார்: ஒருநாள் நான் இறைவனிடம் துஆ செய்தேன். இறைவா! என்னால் இந்த உண்மையைப் புரிய முடியாது. நீ உனது அருளால் எனக்கு புரிய வைப்பாயாக! என்றேன்.

அதன் பிறகு மதிய வேளையில் திடீரென்று எனக்கு ஒரு புதிய உணர்வு, பாதி மயக்க நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் வானிலிருந்து நீல நிற குதிரை ஒன்று இறங்குவதாக தென்பட்டது. அது பூமிக்கு அருகில் வரும்போது அதன் நிறம் மஞ்சளாக மாறுகின்றது. அதன் கழுத்திலிருந்து மின்னலைப் போன்று ஓர் ஒளி வெளியானது. எனது உள்ளத்தில் இது உங்களது நேர்வழி காட்டுபவரின் தோற்றத்தின் அடையாளம் எனப் போடப்பட்டது. மிக விரைவில் இந்த பிரகாசம் பூமியைச் சென்றடையும், எதிரிகளின் நிறத்தை மஞ்சள் நிறமாக்கி விடும். இதற்கு சில மாதங்களுக்குப் பிறகு ஹகீகத்துல் வஹியில் கூறப்பட்ட ஹுஸூரின் பிரகாசமான நட்சத்திரத்தின் அடையாளம் வெளிப்பட்டது.

அந்த அடையாளத்தைப் பற்றி சுருக்கமாக கூறுகின்றேன். இதனைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இதற்குப் பிறகு எந்த வகையில் பிரகாசமான நட்சத்திரம் என்ற இந்த முன்னறிவிப்பு நிறைவேறியது என்றால், சரியாக 1907ம் ஆண்டு மார்ச் 31 தேதியில், மார்ச் 7 லிருந்து 25 நாட்கள் கழித்து உள்ளம் நடுங்கக்கூடிய ஒரு மிகப்பெரிய தீச்சுவாலை வானில் வெளிப்பட்டது. ஒரு மிகப்பெரிய பிரகாசத்துடன் 700 மைல் தொலைவில் அதனை விட அதிகமாக பூமியில் பல இடங்களில் விழுவது பார்க்கப்பட்டது. எவ்வளவு பயங்கரமாக விழுந்தது என்றால், ஆயிரக்கணக்கான மக்கள் அதனைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தார்கள். சிலர் மயக்கமடைந்து பூமியில் விழுந்தார்கள். அவர்களது முகத்தில் தண்ணீர் தெளிக்கப்பட்ட போது தான் அவர்களுக்கு உணர்வு வந்தது. பெரும்பாலான மக்களின் கூற்று என்னவென்றால், அது நெருப்பின் ஒரு உருண்டை ஆகும். மிகவும் அசாதாரண முறையில் தோற்றமளித்தது. அது எவ்வாறு காட்சி அளித்தது என்றால், அது பூமியில் விழுந்து புகையாக வானத்திற்கு சென்று விட்டது. சிலருடைய கூற்று என்னவென்றால், வாலைப் போல் அதன் ஒரு பகுதியில் புகை இருந்தது. பெரும்பாலான மக்களின் கூற்று என்னவென்றால், அது மிகவும் பயங்கரமான ஒரு நெருப்பு ஆகும். அது வடக்கிலிருந்து வந்து தெற்குப் பகுதிக்குச் சென்றது. சிலர் தெற்கிலிருந்து வந்து வடக்குப் பகுதிக்குச் சென்றதாக கூறுகின்றனர். ஏறக்குறைய மாலை 5.30 மணி அளவில் இந்த சம்பவம் நடைபெற்றது.

எனவே இதுபோன்று அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்களுக்கு துஆவிற்குப் பிறகு அடையாளங்களைக் கூறியும், அதனை வெளிப்படுத்தியும் உள்ளான். இதன் மூலம் இவையனைத்தும் அவர்களது ஈமானின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமைந்தன.

எனவே துஆ ஏற்றுக் கொள்ளப்படுவது மூலமாக பிரகாசமான அடையாளங்களின் மூலமாக அல்லாஹ் அந்த சஹாபாக்களின் ஈமானை மேலும் அதிகமாக உறுதிப்படுத்தியும் வலுப்படுத்தியும் உள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆவின் உண்மைத்தனமை மேலும் துஆவின் ஒழுங்குமுறை குறித்த அறிவு சஹாபாக்களுக்கே கிடைத்தது. மேலும் இதனை நம்மில் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்வதற்காக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கும் பிரகாசமான அடையாளங்கள் மூலம் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான அடையாளங்களை காட்டுவானாக! நம்மில் ஒவ்வொருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கொண்டுள்ள ஈமானில் உறுதியுடன் இருப்போமாக! அல்லாஹ்வுடன் ஒரு சிறப்பான தொடர்பு கொள்பவர்களாக ஆவோமாக!

இந்த துஆ இன்றைய காலத்தில் ஒவ்வொரு அஹ்மதியும் செய்ய வேண்டும். நான் கூறிய இந்த இல்ஹாம் அதாவது, எந்தவொரு தற்காலிக குடியிருப்பும் இருக்காது. எந்தவொரு நிரந்தர குடியிருப்பும் இருக்காது.

உலகின் இன்றைய நாட்களில் தென்படக்கூடிய நிலைமைகள் மற்றும் உலகப்போர் ஏற்படுவதற்கான ஆபத்துகள் போன்றவற்றிற்காகவும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் இதிலிருந்து காப்பானாக! மனித குலத்தையே இதிலிருந்து பாதுகாப்பானாக! மேலும் வரவிருக்கும் இந்த துன்பங்கள் யாவும் நீங்கட்டுமாக!

இன்ஷா அல்லாஹ் சில வாரங்களுக்காக நான் மீண்டும் பயணம் செல்கின்றேன். துஆ செய்யுங்கள். அல்லாஹ் எல்லா வகையிலும் அருள்புரிவானாக! அமெரிக்கா மற்றும் கனடாவின் மாநாடுகள் எல்லா வகையிலும் அருளுக்கு உரியதாக ஆகட்டுமாக! உலகில் பாகிஸ்தானைத் தவிர, சில நாடுகளிலும் அஹ்மதிகளின் வாழ்வை கடினமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தீங்கை ஏற்படுத்தக்கூடிய இவர்களில், அரசாங்கமும் அடங்கும்.

தனது வல்லமையின் அடையாளங்களை வெளிப்படுத்தியவாறு இவர்களது தீங்கை அகற்றுவானாக! மேலும் அஹ்மதிய்யத்தின் உண்மையை வெளிப்படுத்துவானாக! எல்லா இடங்களிலும் அஹ்மதிகளை எல்லா விதமான தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 15.06.2012**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456